TNTP130007522026

Presented on : 24-04-2026
Registered on : 24-04-2026
Decided on : 25-06-2026
Duration : 0 years, 2 months, 1 days

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், முசிறி**

முன்னிலை : திரு. ரா. சுரேஷ் குமார் B.A., L.L.B (Hons)., L.L.M.,

நீதித்துறை நடுவர், முசிறி.

நீதித்துறை நடுவர், துறையூர் (முழு கூடுதல் பொறுப்பு)

2026 ம் வருடம் ஜூன் மாதம் 25 ம் தேதி வியாழக்கிழமை

சுருக்க முறை விசாரணை வழக்கு எண். 181/2026

**CNR.No.TNTP1300-0752-2026**

| | | |
|---|---|---|
| 1) | Name of the Court | Judicial Magistrate Court, Thuraiyur. |
| 2) | Name of the Judge | Thiru.R.Suresh Kumar, B.A., LLB (Hons)., LLM., |
| 3) | Date of Judgment | 25.06.2026 |
| 4) | Case Number | S.T.C.No.181/2026 |
| 5) | Name of the Parties of the case | Uppiliapuram PS, Cr.No.373/2023 |
| 6) | Name of the Accused | Ravi, (45/2026) S/o.Perumal |
| 7) | Date of Occurrence | 21.11.2023 |
| 8) | Date of Complaint | 28.11.2023 |
| 9) | Date of Arrest | 29.11.2023 |
| 10) | Date of release on bail | 29.11.2023 |
| 11) | Date of Final Report | 29.11.2023 |
| 12) | Date of Committal of the case to the Court of Sessions | --- |
| 13) | Date of Questioning of the | 26.05.2026 |

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.06.25 18:08:20 +0530

<table>
<tr><td></td><td>accused U/s.240 of Code of Criminal Procedure</td><td colspan="3"></td></tr>
<tr><td rowspan="3">14)</td><td rowspan="3">Date of Examination in Chief and Cross Examination of the witnesses</td><td>Witnesses</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1</td><td>26.05.2026</td><td>---</td></tr>
<tr><td>PW2</td><td>26.05.2026</td><td>26.05.2026</td></tr>
<tr><td>15)</td><td>Date of Examination of the Accused U/s.313 of the Code</td><td colspan="3">02.06.2026</td></tr>
<tr><td>16)</td><td>Details of abscondence of an accused and his appearance / production as the case may be</td><td colspan="3">--</td></tr>
<tr><td>17)</td><td>Grant of Stay by Superior courts and the results there of</td><td colspan="3">--</td></tr>
<tr><td>18)</td><td>Date of Commencement of Trial</td><td colspan="3">26.05.2026</td></tr>
<tr><td>19)</td><td>Date of Closure of Trial</td><td colspan="3">25.06.2026</td></tr>
<tr><td>21)</td><td>Date of Service of Copy of Judgment to the Accused</td><td colspan="3">இவ்வழக்கின் எதிரி இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(1) ன் படி குற்றவாளி இல்லை என தீர்வு கண்டதால் எதிரியை BNSS பிரிவு 278(1)–ன் கீழாக விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரியின் மீதான பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.</td></tr>
<tr><td>22)</td><td>If any delay, give Explanation</td><td colspan="3">---------</td></tr>
</table>

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், துறையூர்,
உப்புலியபுரம் காவல் நிலைய குற்ற எண்.373/2023.
U/s.294(b), 323, 506(1) of IPC ... குற்றமுறையீட்டாளர்

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.06.25 18:08:44 +0530

/எதிர்/

ரவி, வயது (45/2026),
த/பெ.பெருமாள்,
27B, காளிவட்டம் தெரு,
உப்புலியபுரம், துறையூர் தாலுக்கா,
திருச்சி மாவட்டம். .. எதிரி

இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக 25.06.2026ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்குரைஞர் நிலை II அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.M.சசிகுமார் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை பரிசீலனையில் வைத்திருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>தீர்ப்புரை</u>**

1) கடந்த 21.11.2023ம் தேதி மாலை 06.45 மணியளவில் உப்புலியபுரம் சந்தை அருகில் புகார்தாரரின் மனைவி சாட்சி நந்தினிதேவி அவரது மகன் சாட்சி 3 ரோகித் மற்றும் புகார்தாரரிடம் வேலை பார்க்கும் சாட்சி 4 வேலாயுதம் ஆகிய மூவரும் இருந்தபோது, அங்கு வந்த எதிரி ரவி, சாட்சிகள் மூவரையும் பார்த்து தேவடியா புண்டா மவன்களா இங்க ஏண்டா வந்து வசூல் பண்றீங்க என்று திட்டி சாட்சி 4 வேலாயுதத்தை கீழே தள்ளிவிட்டதாகவும், பின் அவர்களை பார்த்து இனி இங்கலாம் வந்து வசூல் பண்ணுனா உங்களை கொல்லாமல விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழ் உப்புலியபுரம் காவல் உதவி ஆய்வாளர் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்,

2) எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும், எதிரிக்கு BNSS பிரிவு 230–ன் கீழ் வழக்கு ஆவணங்களின் நகல்கள் இலவசமாக அளிக்கப்பட்டது.

SURESHKUMAR R
Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.06.25 18:08:56 +0530

3) எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் படியான குற்றச்சாட்டுக்கள் விளக்கி வினவிய போதும் எதிரி தான் குற்றவாளி இல்லை என்று மறுத்துள்ளார்.

4) அரசுத்தரப்பு சாட்சிகள் பட்டியலில் 1 முதல் 8 வரையிலானவர்களின் பெயர்கள் காண்பிக்கப்பட்டும், பின்னர் அ.சா.1 மற்றும் கூடுதல் சாட்சியாக அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும் உள்ளன.

5) **<u>அரசுத்தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரிய வரும் அரசுத்தரப்பு சாட்சிய சுருக்கம் :</u>**

(அ) இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 லோகநாதன் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரி தனக்கு அண்ணன் முறை என்றும், சுமார் 1 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் தற்போது ஞாபகம் இல்லை என்றும், மாலை 6.00 மணியளவில் தான் பணி முடிந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது தனது மனைவியை யாரோ அடையாளம் தெரியாத ஒரு நபர் அசிங்கமான வார்த்தைகளால் திட்டியும், தன் மகன் ரோகித் மற்றும் வேலாயுதத்தை அடித்து கொலை மிரட்டல் விடுத்துள்ளார் என்றும், அந்த நபர் யார் என்று தனக்கு தெரியாது என்றும், ஆஜர் எதிரி மீது இருந்த முன் விரோதம் காரணமாக அவருக்கு எதிராக புகார் கொடுத்தேன் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெப்பம் தன்னுடையது தான் என்றும், புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 என்றும், வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

SURESHKUMAR R
Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.06.25 18:09:07 +0530

(ஆ) அ.சா.2 சத்தியவிநாயகம் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 21.11.2023ம் தேதி உதவி ஆய்வாளர் பிரகாஷ் என்பவர் நிலையத்தில் இருந்தபோது ரவி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய மனு எண்.1926/2023 வழங்கி விசாரணைக்கு பின்பு நிலைய குற்ற எண்.373/2023 சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழ் 19.30 மணிக்கு வழக்கினை பதிவு செய்ததாகவும், அந்த புகார் மனு அ.சா.ஆ.2 என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், பிறகு வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 29.11.2023ம் தேதி காலை 08.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பத்மநாதன், ராமராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் என்றும், பார்வை மகஜர் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 என்றும், பிறகு பட்டியல் சாட்சிகளான 1 முதல் 5 வரை விசாரணை செய்து வாக்கு மூலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும், பிறகு அவரது விசாரணையில் சம்பவம் உண்மை என்று தெரிந்து எதிரியை தேடிவந்த நிலையில் இவ்வழக்கின் எதிரியான ரவி என்பவரை கடந்த 29.11.2023ம் தேதி 17.50 மணியளவில் உப்புலியபுரம் காவல் நிலையத்தில் ஆஜரானவரை குற்ற காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில் விடுவித்துள்ளார் என்றும், பிறகு தனது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் இவ்வழக்கின் எதிரி ரவியினி் மனைவி மகன் மற்றும் மகள் ஆகியோர் வழக்கு சம்பவத்தில் இல்லை என்று தெரிய வந்ததால் அவர்களை இவ்வழக்கிலிருந்து நீக்கி எதிரிகள் நீக்கல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், அந்த எதிரி நீக்கல் அறிக்கை அ.சா.ஆ.6 என்றும், பிறகு அவரது வழக்கு விசாரணை முடித்து எதிரி மீதான குற்றத்திற்கு போதிய

SURESHKUMAR R
Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.06.25 18:09:18 +0530

ஆதாரம் இருந்ததால் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6) அரசுத்தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(ஆ)–படியாக எதிரியிடம் வினவிய போது எதிரி அதனை மறுத்துள்ளார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7) தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:**

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், இவ்வழக்கில் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) ன் படியாக அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாதுரை ஆகியவற்றின் மூலமும் எந்தவிதமான ஐயங்களுக்கிடமின்றி மெய்ப்பிக்கப் பட்டனவா? என்பதேயாகும்.**

8) இவ்வழக்கில் கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் அரசுத்தரப்பு சாட்சி அ.சா.1 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும், அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலானவர்கள் சம்பவம் குறித்து சாட்சியம் அளித்து சான்றாவணம் குறியீடு செய்தும் உள்ளதால் எதிரி மீதான குற்றங்கள் அரசுத்தரப்பில் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தண்டனை அளிக்க வேண்டுமாய் வாதிட்டார்.

9) இவ்வழக்கில் கற்றறிந்த எதிரி தரப்பு வழக்குரைஞர் அரசு தரப்பு வாதத்தினை மறுத்தும் இவ்வழக்கில் சம்பவம் குறித்தும், புகார் அளித்தது குறித்தும், சாட்சியம் அளிக்கவேண்டிய அ.சா.1 முதல் விசாரணையில் பிறழ் சாட்சியாகியுள்ளார் என்றும், மேலும் அ.சா.2 காவல் சிறப்பு உதவி ஆய்வாளரின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை உறுதி செய்யும் வகையில்

SURESHKUMAR R
Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.06.25 18:09:30 +0530

எந்தவிதத்திலும் எந்த சாட்சியமும் அமையாததால் எழும் ஐயத்தின் பலனை எதிரிக்கே அளித்து எதிரியை விடுதலை செய்யவேண்டுமாய் வாதிட்டார்.

**10) பிரச்சனைக்குரிய தீர்வு:**

**இரு தரப்பு வாதங்களும் சான்றாவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.**

11) இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 லோகநாதன் ஆஜர் எதிரி தனக்கு அண்ணன் முறை என்றும், சுமார் 01.00 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் தற்போது ஞாபகம் இல்லை என்றும், மாலை 6.00 மணியளவில் தான் பணி முடிந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது தனது மனைவியை யாரோ அடையாளம் தெரியாத ஒரு நபர் அசிங்கமான வார்த்தைகளால் திட்டியும், தன் மகன் ரோகித் மற்றும் வேலாயுதத்தை அடித்து கொலை மிரட்டல் விடுத்துள்ளார் என்றும், அந்த நபர் யார் என்று தனக்கு தெரியாது என்றும், ஆஜர் எதிரி மீது இருந்த முன் விரோதம் காரணமாக அவருக்கு எதிராக புகார் கொடுத்தேன் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படுத் புகாரில் உள்ள கையெப்பம் தன்னுடையது தான் என்றும், புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 என்றும், வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.1 ன் சாட்சியம் பிறழ் சாட்சியம் ஆக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போதிலும் அவர் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

12) மேற்கண்ட சாட்சிய சான்றாவணங்களை ஒருங்கிணைத்து பார்க்கும் போது, எதிரி, அ.சா.1 ன் மனைவி நந்தினிதேவி, மகன் ரோகித் மற்றும் வேலாயுதன் ஆகியோரை அசிங்கமாக பேசியதாவோ, வேலாயுதத்தை கீழே தள்ளிவிட்டதாகவோ மற்றும் அவர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவோ, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.06.25 18:09:40 +0530

வலுசேர்க்கும் வகையில் அமையவில்லை என்றும், அ.சா.2 ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள நிலையில், அ.சா.2 ன் சாட்சியத்தின் அடிப்படையில் மட்டும் எதிரியை இவ்வழக்கின் குற்றச்சாட்டுடன் தொடர்புபடுத்த முடியாது என்றும், விசாரணை அதிகாரியின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் இவ்வழக்கு எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தகுநிலை ஐயப்பட்டிற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இவ்வழக்கில் மேற்கண்ட பிரச்சனைக்கு அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**<u>13) முடிவாக:–</u>**

இவ்வழக்கின் எதிரி இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் படி குற்றவாளி இல்லை என தீர்வு கண்டதால் எதிரியை BNSS பிரிவு 278(1)–ன் கீழாக விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

(எதிரியின் மீதான பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது).

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் நாளான இன்று என்னால் நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.06.25 18:09:51 +0530

நீதித்துறை நடுவர், (முழு கூடுதல் பொறுப்பு),
துறையூர்

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | | |
|---|---|---|
| அ.சா. | 1 | லோகநாதன் |
| அ.சா. | 2 | சத்திய விநாயகம் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ. | 1 | புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ. | 2 | புகார் மனு |
| அ.சா.ஆ. | 3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ. | 4 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ. | 5 | வரைபடம் |
| அ.சா.ஆ | 6 | எதிரி நீக்கல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுப்பொருள்கள்** : இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருட்கள் :**
இல்லை.

SURESHKUMAR R
Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.06.25 18:10:02 +0530

நீதித்துறை நடுவர், (முழு கூடுதல் பொறுப்பு),
துறையூர்

**குறிப்பு:**

1) எதிரி விசாரணையின் போது பிணையில் இருந்தார்.

2) சாட்சிகள் மூன்று கேட்புரைக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.

3) வழக்கு பற்றிய முடிவு முறையிடுபவருக்கு தெரிவிக்கப்பட்டது.

SURESHKUMAR R
Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.06.25 18:10:11 +0530

நீதித்துறை நடுவர், (முழு கூடுதல் பொறுப்பு),
துறையூர்.

/உண்மைநகல்/

நீதித்துறை நடுவர், (முழு கூடுதல் பொறுப்பு),